**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

**I.A.No.153/2025 in I.A.No.1067/2023**

**in O.S. No.55/2023**

திரு.D.பொன்வேந்தன்,B.Tech,M.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திருமதி. மாலதி | அசல் வழக்கு எண். | 43/2019 |
| க/பெ. | - | ஆனந்தராஜா | ம.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

11.06.2025.

முதல் விசாரணை.

நான் எனது தரப்பு பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நான் சொன்னத்தின் பேரில் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டதுதான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. இ.ம.எண். 1067/2023 மனுவில் போர்வெல் சம்மந்தமான பிரச்சனை இருப்பதாக நான் சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை, எதிர்மனுதாரர் எந்த ஒரு தொந்தரவும் செய்யக்கூடாது என்று பொதுவாக சொல்லி பரிகாரம் கேட்டுள்ளேன். போர்வெல் சம்மந்தமான உரிமையை குறிப்பிட்டு உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ளதா என்றால் மனு சொத்து முழுதையும் அனுபவிப்பதை தொந்தரவு செய்யக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. இ.ம.எண்.1067/2023 மனுவில் தண்ணீரானது குப்பையில் வந்து விழுகிறது என்றும் ஆக்கரமிப்பு செய்யப்பட்டு காம்பவுண்ட் சுவர் எழுப்பப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் என்னை தொந்தரவு செய்கிறார்கள் என்று மட்டும்தான் குறிப்பிட்டுள்ளேன், காம்பவுண்ட் சுவர் ஆக்கிரமிப்பு செய்து அமைத்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை.

இ.ம.எண்.1067/2023 மனுவில் எனக்கு போர்வெல் சம்மந்தமான பிரச்சனை இருப்பதாக சொல்லவில்லை என்றும் இந்த நீதிமன்ற அவமதிப்பு மனுவிற்காக போர்வேல் சம்மந்தமான பிரச்சனை இருப்பதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு போல்வெல் சம்மந்தமதான பிரச்சனை இருந்திருந்தால் இ.ம.எண்1067/2023 மனுவிலேயே குறிப்பிட்டிருப்பேன் என்றால் இ.ம.எண்.1067/203 மனு தாக்கல் செய்யும்போது போர்வேல் பிரச்சனை  இல்லை, தற்போதுதான் அந்த பிரச்சனை வந்துள்ளது. போர்வேல் சம்மந்தமாக எனக்கு இடைக்கால உத்தரவு கொடுக்கப்படவில்லை என்றால், நான் தடை உத்தரவு பெற்றுள்ள பகுதியில்தான் போல்வெல் அமைந்துள்ளது.

3. நான் சொல்லும் போர்வெல்  எங்கு அமைந்துள்ளது என்றால், எனக்கு பாத்தியப்பட்டு எதிர்மனுதாரரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்தில் உள்ளது, அந்த போல்வெல் எதிர்மனுதாரரின் வீட்டிற்குள் உள்ளது. நான் சொல்லும் போல்வெல்லை யார் யாரெல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்று எனது மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.  நான் சொல்லும் போர்வெல்லை யாரெல்லாம் பயன்படுத்திவருகிறார்கள் என்றால் நான் மட்டும்தான் பயன்படுத்தி வருகிறேன். எனது மனுவில் போல்வெல் மோட்டாரின் மின்சார இணைப்பில் துண்டித்துவிட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் மேற்படி மின்சார இணைப்பு எந்த வீட்டில் இருந்து வருகிறது என்றால், என்னுடைய வீட்டில் இருந்து வருகிறது.  என் வீட்டில் இருந்து வருவதாக சொல்லும்  மின்சார ஓயரை எதிர்மனுதாரரின் கணவர் துண்டிக்கவில்லை என்றால் சரியல்ல.

4. எதிர்மனுதாரரின் கணவர் மோட்டார் மின்சார இணைப்பை துண்டித்ததாக சொல்லி நான் காவல் நிலையத்தில் 26.03.2025 ல் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும்  வா.சா.ஆ.2 ஆவணம்தான் அந்த புகார் என்றால் சரிதான். வா.சா.2 ஆவணத்தில் போர்வெல் சம்மந்தமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன்.  போர்வெல் சம்மந்தமான பிரச்சனை இருப்பதாக புகாரில் குறிப்பிடவில்லை என்றும் அப்படி குறிப்பிட்டிருந்தால் வா.சா.ஆ.3 சி.எஸ்.ஆர். ரசீதில் அது பற்றிய வாசங்கள் கண்டு எழுதப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எனது கணவரின் அண்ணன் காவலராக பணிபுரிந்து வருவதால் அவருடைய செல்வாக்கை பயன்படுத்தி என்னுடைய புகாரில் போர்வெல் சம்மந்தமான பிரச்சனை இருப்பதாக மிகைப்படுத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. பழுதாகி இருந்த போர்வெல்லை என்னுடைய கணவர்தான் சரி செய்வதற்காக தூக்கினார் என்றால் சரிதான். பழதாகியிருந்த போர்வெல்லை எடுத்து எதிர்மனுதாரரின் வீட்டின் மொட்டை மாடியில் நாங்கள் வைத்தோம் என்றால், போர்வெல்லின் பைப்பை மட்டும்தான் எடுத்தோம் அதை முழுவதுமாக எடுக்கவில்லை, என் வீட்டிலும் எதிர்மனுதாரரி வீட்டிலும் அந்த பைப் பகுதியாக எடுத்து போடப்பட்டது. நான் சொல்லும் போர்வெல் ஆனது எதிர்மனுதாரரின் வீட்டில் உள்ளது என்றும் அதனை இரவு 11.-00 மணிக்கு வெளியே எடுத்து போடவேண்டிய அவசியம் எதிர்மனுதாரருக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் போர்வெல் பைப்பை சரி செய்வதற்காக எதிர்மனுதாரரின் வீட்டின் மீது எடுத்து வைத்திருந்த பைப்பைதான் எதிர்மனுதாரர் எடுத்து எனது வீட்டு பக்கம் போட்டார் என்றால், பைப்பானது போர்வேல்லிலேயே ஒட்டி இருந்தது அதனை வெளியே எடுக்க முடியாது.

6. எதிர்மனுதாரரின் வீட்டிற்குள் இருக்கும் போர்வெல் மோட்டாரை எடுப்பதற்காக எனது கணவர்தான் அத்துமீறி நுழைந்தார் என்றும் அப்போதுதான் மோட்டார் கீழே இறங்கியது என்றும் அதனை மறைத்து எதிர்மனுதாரரின் கணவர் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் கணவர் இவ்வழக்கின் தரப்பினராக உள்ளாரா என்றால் உள்ளார். எதிர்மனுதாரரின் கணவர் இவ்வழக்கில் தரப்பினராக இல்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கை தொடர்ந்து நடத்த கூடாது என்பதற்காகத்தான் பல்வேலு இடை நிலை மனுக்களை நான் தாக்கல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the witness read over th the witness are admitted by him/her to be correct.

District Munsif
Vanur.